## கவரைப்பேட்டை அருகே ரயில் விபத்து:

# பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு உறுதுணையாக இருக்கும்!

### நள்ளிரவில் ஸ்டான்லி மருத்துவமனையில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

சென்னை, அக். 14 -

**கவரைப்பேட்டை அருகே நடைபெற்ற ரயில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு உறுதுணையாக இருக்கும் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நள்ளிரவில் ஸ்டான்லி மருத்துவமனைக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறியபின் பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.**



திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டை அருகே மைசூரில் இருந்து பீகார் மாநிலம் தர்பாங்கா நோக்கி சென்ற பாக்மதி அதிவிரைவு எக்ஸ்பிரஸ் இரயிலும், சரக்கு இரயிலும் மோதிக் கொண்டன. இந்த விபத்தில் பயணிகள் இரயிலின் முதல் 7 பெட்டிகள் தரம் புரண்டன. இதில் ஒரு பெட்டியில் தீ விபத்தும் ஏற்பட்டது. விபத்து நடந்த இடத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையின் 3 தீயணைப்பு வாகனங்களும், 25 தீயணைப்பு வீரர்களும் பணியில் ஈடுபட்டு தீயை முற்றிலும் அணைத்தனர். இந்த விபத்தின் காரணமாக பயணிகள் இரயிலில் பயணம் செய்த 19 நபர்கள் காயமடைந்தனர்.

விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் பொன்னேரி அரசு மருத்துமனைக்கு அவசர ஊர்தி மூலம் கொண்டு செல்லப்பட்டனர். அதிக காயமடைந்த 3 நபர்கள் அவசர ஊர்தி மூலம் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் ராகுல் குமார் வயது (22), பிரியன்ஸ்சு குமார் வயது (20), சந்தன் குமார் வயது (25) ஆகிய 3 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக முதலமைச்சரின் உத்தரவின்பேரில் சம்மந்தப்பட்ட நிகழ்விடத்திற்கு சிறுபான்மை யினர் நலன் மற்றும் அயல்நாட்டுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், கும்மிடிபூண்டி சட்ட மன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சியர் திருவள்ளூர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கூடுதல் காவல்துறை இயக்குனர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), ஆகியோர் சென்று மீட்பு பணிகளை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் (11.10.2024) நள்ளிரவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும், நபர்களை நள்ளிரவில் நேரில் பார்வையிட்டு நலம் விசாரித்தார்.

பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

திருவள்ளூர் மாவட்டம் கவரப்பேட்டை அருகே மைசூரில் இருந்து பீகார் மாநிலம் தர்பாங்கா நோக்கி சென்ற பாக்மதி எக்ஸ்பிரஸ் இரயிலும், சரக்கு இரயிலும் மோதிக் கொண்ட விபத்தையடுத்து, முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் விபந்து நடத்த இடத்தில் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் மீட்புப்பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

விபத்து நடந்த உடனே அந்த பகுதிக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 22க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ்கள் அனுப்பி வைக்கப்பட்டன. விபத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு உள்ளனர். ஸ்டான்லி மருத்து வமனையில் இதுவரை மொத்தம் 3 நபர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 2 பேர் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளார்கள். இதுவரை எந்த ஒரு உயிரிழப்பும் இல்லை. அனைவருக்கும் ஸ்டான்லி மருத்துவமனையில் தரமான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. விபத்து நடந்த இடத்தில் மாவட்ட நிர்வாகம், காவல்துறை, தீயணைப்புத்துறை, மருத்துவக்குழு ஆகிய துறையினர் முழுவீச்சில் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மீட்புப் பணிகளை முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். இந்த விபத்தால் பயணம் மேற்கொள்ள முடியாத இரயில் பயணிகள் தங்குவதற்காக விபத்து நடந்த இடத்திற்கு அருகிலேயே, 3 திருமண மண்டபங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. மேலும், அவர் களுக்குத் தேவையான அனைத்தையும் தமிழ்நாடு அரசு செய்து தரும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி, துணை முதலமைச்ச ரின் செயலாளர் பிரதீப் யாதவ், சென்னை பெருநகர மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

பாக்மதி அதிவிரைவு எக்ஸ்பிரஸ் இரயில் பயணிகள் கவரைப்பேட்டையிலுள்ள TJS கல்யாண மண்டபம் (400), சாய் நிவாஸ் கல்யாண மண்டபம் (350), செல்லம்மாள் கல்யாண மண்டபம் (100) ஆகியவற்றில் 800க்கும் மேற்பட்ட பயணிகள் தங்க வைக்கப்பட்டு உடனடியாக குடிநீர் மற்றும் பிஸ்கட் வழங்கப்பட்டது. இரவு உணவு மற்றும் இதர வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இரவு உணவு அளிக்கப்பட்டு மேற்படி திருமண மண்டபங்களிலிருந்து பொன்னேரி இரயில் நிலையத்திற்கு 20க்கும் மேற்பட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பேருந்துகள் மூலம் அழைத்து செல்லப்பட்டு அங்கிருந்து சிறப்பு இரயில் மூலம் சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர்.

## தி.மு.க. இளைஞரணி சார்பில் திண்டிவனத்தில் மண்டல அளவில்

# ‘என் உயிரினும் மேலான’ கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி!

### அமைச்சர் க.பொன்முடி தொடங்கி வைத்தார்! கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்!

*திண்டிவனம் அக்.14-*

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு நூறு இளம் பேச்சாளர்களை தலைமைக்கு தேர்வு செய்து தருமாறு கழக தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கழக இளைஞரணியை அறிவுறுத்தி இருந்தார்.

அந்த வகையில் என் உயிரினும் மேலான என்ற தலைப்பில் பேச்சுப் போட்டிகள் அறிவிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் 17 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் விண்ணப்பித்தனர்.

மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் பங்கேற்க விண்ணப்பித்தவர்களுக்கான பேச்சு போட்டிகள்கடந்த ஆகஸ்ட் மாதம். நடைபெற்றது.

இப் போட்டியில் 913 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்டவர்களுக்கானமண்டல போட்டிகள்விழுப்புரம்மாவட்டம் திண்டிவனம் உள்ளிட்ட 8 இடங்களில் நடைபெற்றன.

இந்நிலையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி திண்டிவனத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் விழுப்புரம் வடக்கு ஆனந்த், தெற்கு தினகரன், கடலூர் கார்த்திகேயன், கணேஷ்குமார்,கள்ளக்குறிச்சி தாகப் பிள்ளை, அருண் ராஜ், புதுச்சேரி சம்பத் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற என் உயிரினும் மேலான பேச்சுப் போட்டியை தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி தொடங்கி வைத்துசிறப்புரையாற்றினார்.

பேராசிரியர் சுப. வீரபாண்டியன், மருத்துவர் ஷாஃபி கலைமான், தமிழ் காமராசன் ஆகியோர் நடுவராக பங்கேற்ற பேச்சு போட்டியில் என்றென்றும் பெரியார் ஏன்?

அண்ணாவும் மாநில சுயாட்சியும்,கலைஞர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி

திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாட்டு குடும்பங்களில் தி.மு.க. உள்ளிட்ட 5 தலைப்புகளில் நடைபெற்ற பேச்சு போட்டியில்

விழுப்புரம் ,கடலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்தும் புதுச்சேரி மாநிலத்தில் இருந்தும் 96க்கும்மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு அமைச்சர் க.பொன்முடி சால்வை அணிவித்து பரிசுகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம்,மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயச்சந்திரன்,தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா,நகர செயலாளர் கண்ணன்,ஒன்றிய பெருந்தலைவர்கள் சொக்கலிங்கம், அமுதா ரவிக்குமார்,திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, மணிமாறன், துரை, இளம்வழுதி, செயற்குழு உறுப்பினர் சீனி சின்னராஜ், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், மாவட்டஇளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.கே.பி.ரமேஷ், விஜயகுமார், பாபு, அண்ணாமலை, உதயகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தி.மு.க. இளைஞரணி சார்பில் மண்டல அளவில் திண்டிவனத்தில் நடைபெற்ற ‘என் உயிரினும் மேலான’ கலைஞர் நூற்றாண்டுபேச்சு போட்டியை கழக துணை பொது செயலாளர் – வனத்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி தொடங்கி வைத்தார். உடன் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம்உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

# கல்லாக இருந்த என்னை சிலையாகச் செதுக்கியவன் நீ!



**என் இனிய நண்பனே!**
**செல்வமே!**
**அரை நூற்றாண்டுக்கும் மேலாக**
**என் நெஞ்சமெல்லாம் நிறைந்து நின்றவனே!**
**கழக அன்பனாக அறிமுகமாகி;**
**நண்பனாக நெருங்கிப் பழகி;**
**அறிவுரை கூறும் போதெல்லாம்**
**எனக்கு ஆசானாக மாறி;**
**துன்பம் என்னைச் சூழநின்ற போதெல்லாம்**
**என்னை அரவணைத்து ஆறுதல் கூறும் தாயாகி**
**நின்றவன் நீ அல்லவா?**

**உன்னை நான் சந்திக்காமல் போயிருந்தால்**
**எந்த நிலையில் நான் இருந்திருப்பேன்**
**என்று எனக்குத் தெரியாது!**

**கல்லூரித் தோழன் மட்டுமா நீ எனக்கு?**
**பல கலைகளை எனக்குக் கற்பித்த**
**பல்கலைக்கழகம் அல்லவா நீ!**

**பட்டிக்காட்டிலிருந்து சென்னைக்குப்**
**படிக்க வந்த எனக்கு**
**பட்டினத்து வழிகாட்டி நீதானே!**

**எப்படிப் பழகுவது - பேசுவது - உடை அணிவது**
**என்பன எல்லாம் நான் கற்றுக் கொண்டது**
**உன்னிடம்தானே!**

**சுருக்கமாகச் சொல்வதென்றால்**
**கல்லாக இருந்த என்னை**
**சிலையாகச் செதுக்கியவன் நீ!**
**அந்தச் சிலைக்கு முரசொலியில்**
**அரசியல் ஞானஸ்தானம் செய்து**
**தலைவர் கலைஞருக்கு அறிமுகம்**
**செய்து வைத்தவனும் நீதானே!**

**அரசியல் அரங்கிலும், கழக நிலைப்பாடுகளிலும்**
**நான் உயர்நிலையில் நின்ற போதெல்லாம்**
**எனக்கு உந்து சக்தியாக இருந்தது நீ அல்லவா!**
**எனக்கு எல்லாமாகி இருந்தவன் நீ!**

**இன்று இல்லாமல் போய் விட்டதை**
**என்னால் எப்படி ஏற்றுக் கொள்ளமுடியும்?**
**சுமார் 60 ஆண்டுகால வைரம் ஏறிய நட்பு**
**நம்முடைய நட்பு!**

**இந்த நீண்ட கால இடைவெளியில்**
**ஒரு ஊடல், உரசல் என்று எதுவுமே ஏற்பட்டது இல்லையே!**

**“தலைவர் கலைஞருக்குப் பிறகு**
**நான் சாய்வதற்குக் கிடைத்த**
**கடைசித் தோளை இழந்து நிற்கிறேன்!”**

**இது உன் மறைவு குறித்து**
**தளபதி ஆற்றாமையில் வெளிப்படுத்திய சொற்கள்!**
**தளபதிக்கு ஓர் சாய்வுத் தோளாய் இருந்தாய்!**
**ஆனால், எனக்கோ தடம் பார்த்து நடக்க**
**ஊன்று கோலாக இருந்தாய்!**
**அந்தக் கோல் அல்லவா ஒடிந்து சாய்ந்துவிட்டது!**

**என் அரும் நண்பனே!**
**நீ இல்லாத நட்பு எனக்கு**
**நிலவு இல்லாத வானம்;**
**நீர் இல்லாத ஆறு;**
**மகிழ்ச்சி இல்லாத வாழ்வு.**
**சிறகொடிந்த பறவையாய்**
**சிறிது காலம் வாழ்ந்துவிட்டு**
**வருவேன் உன்னோடு!**



**துரைமுருகன்**
கழகப் பொதுச் செயலாளர்